# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
# மற்றும்
# இந்திய வானிலை மையம் இணைந்து வழங்கும் வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை-சென்னை

(13.07.2016 முதல் 17.07.2016 வரை)

**கடந்த நான்கு நாட்களில் நிலவிய வானிலை (08.07.2016 முதல் 10.07.2016)**

சென்னை மற்றும் அதன் சுற்றுப் புறங்களில் கடந்த நான்கு நாட்களாக வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது 7.2 மி.மீ அளவு மழை பெய்தது. அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச வெப்ப நிலை முறையே 34.0-37.0°C மற்றும் 25.0-29.0°C என்ற அளவில் இருந்தது. காற்றின் ஈரப்பதம் 57 முதல் 78 விழுக்காடு நிலவியது. காற்றின் வேகம் மணிக்கு 6-8 கிலோமீட்டர் அளவில் இருந்தது.

**அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு**

| தேதி | 13.07.2016 | 14.07.2016 | 15.07.2016 | 16.07.2016 | 17.07.2016 |
|---|---|---|---|---|---|
| மேகமூட்டம் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் |
| மழை பொழிவு (மி.மீ) | 0 | 2 | 2 | 5 | 20 |
| காற்றின் வேகம் கி.மீ/ மணிக்கு | 8 | 8 | 8 | 8 | 8 |
| காற்று வரும் திசை | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |
| வெப்பநிலை°C | | | | | |
| அதிகபட்ச வெப்பநிலை°C | 37 | 37 | 36 | 36 | 34 |
| குறைந்த பட்ச வெப்பநிலை°C | 29 | 29 | 28 | 28 | 25 |
| ஈரப்பதம் | 60-70 | 60-70 | 65-75 | 65-75 | 75-87 |

**பண்ணையாளர்கள் அடுத்த ஐந்து நாட்கள் மேற்கொள்ள வேண்டிய வேளாண்மை மற்றும் கால்நடை மேலாண்மை முறை பற்றிய ஆலோசனை.**

1. 14.07.2016 முதல் 17.07.2016 வரை ஆகிய நாட்களுக்கு இலேசான முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.
2. அடைப்பான் நோய் தாக்க வாய்ப்புள்ள பகுதிகளில் உழவர்கள் தங்களுடைய மாடு மற்றும் ஆடுகளுக்கு அருகில் உள்ள கால்நடை மருந்தகத்தை அணுகி அடைப்பான் நோய்க்கான தடுப்பூசி அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
3. உழவர்கள் தங்களுடைய கொட்டகை மற்றும் அதன் சுற்றுப்புறங்களை தண்ணீர் தேங்காமல் உலர்ந்து வைப்பதால் கால்நடைகளுக்கு ஏற்படும் குளம்பு அழுகல் நோய் மற்றும் ஈ மற்றும் கொசுகளின் பொருக்கத்தை தடுக்கலாம்.
4. கொசு மற்றும் பூச்சிகளை விரட்ட நொச்சி,வேம்பு இலைகளை கொண்டு புகை மூட்டம் போட வேண்டும்.
5. செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடுகளுக்கு கால்நடை மருத்துவரின் பரிந்துரைப்படி குடற்புழு நீக்க மருந்தினை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
6. உழவர்கள் தங்களுடைய கறவை மாடுகளின் மடியை நன்றாக கழுவி மற்றும் உலர்த்தி பால்கறக்கவும் மேலும் பால் கறந்த பின்பு தூசி அதிகமுள்ள உலர்தீவனம் அளிப்பதை தவிர்ப்பதன் மூலம் மடிவீக்க நோய் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.

**வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கான சிறப்பு வானிலைக்கேற்ப மேலாண்மை முறைகள்**

**முக்கிய பயிர்கள்:** நெல், கரும்பு மற்றும் வேர்க்கடலை

1. கரும்பில் இளங்குருத்து புழுவைக் கட்டுப்படுத்த ஹெக்டருக்கு கார்போ.ஃபியூரான் 3G 33 கிலோ என்ற அளவில் மண்ணில் இட்டுக் கட்டுப்படுத்தலாம்.
2. நெல் நாற்றங்காலில் இலைப்பேனை கட்டுப்படுத்த பாஸ்போமிடான் 40 SL லிட்டருக்கு 1 மி.லி அல்லது குளோரிபைரிபஸ் 20 EC லிட்டருக்கு 2 மி.லி தெளிக்கவும்.

*திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த வேளாண் வானிலை தகவல் மையம்*
*மற்றும் பேராசிரியர் மற்றும் தலைவர்,*
*கால்நடை உற்பத்தி மேலாண்மைத் துறை,*
*சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை –600 007.*